# கனிய வளங்கள் பற்றிய தேசிய கொள்கை

## அறிமுகம்

பெருமளவு பயன்பாடுகளுக்கான மூலப்பொருளாக பயன்படுத்தப்படும் கனிப்பொருட்கள் பல மில்லியன் ஆண்டுகளாக மனித நாகரிகத்துடன் தீவிரமாகப் பிணைந்துள்ளதொரு மூலப்பொருளாகும். வரைவிலக்கணத்தின்படி கனிப்பொருளானது இயற்கையாக உருவாகின்ற சேதனமற்ற மற்றும் திட்டவட்டமான இரசாயன உள்ளடக்கத்துடன் கூடிய படிக இயல்பைக் கொண்ட ஒரு பொருளாகும். இலங்கையினுள் இனங்காணப்பட்டுள்ள அதிகளவில் காணப்படுகின்ற கனிப்பொருட்கள் சர்வதேச கனிப்பொருள் கைத்தொழில் துறையினுள் சிறப்பியல்பானதாகக் கருதப்படாத போதிலும் தனது தரம் மற்றும் இயல்புகளின் காரணமாக ஒருசில கனிப்பொருள் வகைகள் மிகவும் சிறப்பியல்பான தன்மையைக் கொண்டுள்ளன.

பெருமளவு பொருளாதார அனுகூலங்களை நாட்டிற்கு பெற்றுத்தருவதற்கு இலங்கையில் காணப்படுகின்ற இடம்சார்ந்த கனிப்பொருட்களுக்கு இயலுமை உள்ள போதிலும் அவற்றில் குறிப்பிடத்தக்களவு பகுதி மூலப்பொருட்களாக, பகுதியளவு மூலப்பொருட்களாக அல்லது அவற்றின் உச்சமட்ட பயனைப் பெற முடியாதவாறு குறிப்பிடத்தக்களவு பெறுமதி சேர்க்கப்படுதலின்றி ஏற்றுமதி செய்யப்படுகின்றது. தொழில்நுட்ப மற்றும் நிபுணத்துவ குறைபாட்டின் காரணமாக கனிய வளங்கள் தொடர்பிலான விரிவான கண்டுபிடிப்புகள், வினைத்திறன்மிக்க அகழ்வு நடவடிக்கைகள், பயன்பாடுகள் மற்றும் பெறுமதி சேர்த்தல் தொடர்பில் குறிப்பிடத்தக்களவு தடைகள் ஏற்பட்டுள்ள போதிலும், கனிப்பொருள் துறையினுள் விரிவான உள்ளார்ந்த ஆற்றல் உள்ளதென்பது ஏற்றுக்கொள்ளப்பட்டதொரு விடயமாகும்.

உள்நாட்டு கனிய வளங்களுக்கு உச்சமட்ட பெறுமதி சேர்த்தல் மற்றும் நாட்டிலுள்ள வரையறுக்கப்பட்ட கனிய வளங்களை நிலைபேறான விதத்தில் பயன்படுத்துவதற்கான மூலோபாயங்களைத் தயாரித்தல் தொடர்பில் காணப்படுகின்ற பிரச்சினைகளை

தீர்ப்பதை நோக்கமாகக் கொண்டு அமைச்சரவையின் அங்கீகாரத்தின் கீழ் மற்றும் இலங்கையில் உள்ள ஏற்புடைய தரப்பினர்களுடன் கலந்துரையாடிய பின்னர் விஞ்ஞான, தொழில்நுட்பவியல் மற்றும் ஆராய்ச்சி அமைச்சினால் **கனிய வளங்கள் பற்றிய தேசிய கொள்கை** (கொள்கை) தயாரிக்கப்பட்டது.

இன்றைய மற்றும் எதிர்காலச் சந்ததியினருக்காக நாட்டிலுள்ள கனிய வளங்களை நிலைபேறான விதத்தில் பயன்படுத்தல் தொடர்பில் அரசாங்கத்தினதும் நாட்டு மக்களினதும் அர்ப்பணிப்பு இக்கொள்கையின் மூலம் வலியுறுத்தப்படுகின்றது. இக்கொள்கையின் அடிப்படை நோக்காக உள்ளது நாட்டின் கனிய வளங்களை உச்ச அளவில் உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி அனுகூலங்களை அடையப்பெறும் பொருட்டு பயன்படுத்துதலும் மற்றும் அவற்றின் பெறுமதித் தொடரை உகந்தவாறு உயர்வடையச் செய்தலும் அதேபோன்று இலங்கையினுள் நிலைபேறான அபிவிருத்திக் கட்டமைப்பினுள் உயர் சுற்றாடல் முகாமைத்துவத்தை உறுதிசெய்தலுமாகும். இக்கொள்கையின் மூலம் மணல் தவிர்ந்த இலங்கையினுள் காணப்படுகின்ற அனைத்து கைத்தொழில் கனிப்பொருட்களும் உள்ளடக்கப்படுகின்றது.

இக்கொள்கை மிருதுவான விதத்தில் நடைமுறைப்படுத்தப்படுவதை உறுதி செய்தல் மற்றும் முகாமைத்துவம் செய்தல் கனிய வளங்கள் விடயம் பற்றிய பொறுப்பை ஏற்றுள்ள அமைச்சின் மூலம் மேற்கொள்ளப்படும்.

**நோக்கங்கள்;**

- கனிப்பொருட்களின் உச்சமட்ட உள்ளார்ந்த ஆற்றலை அடையும் பொருட்டு அத்துறையை முகாமைத்துவம் செய்தல் மற்றும் வலுப்படுத்தல்
- நாட்டின் கனிய வளங்களில் பெறுமதி சேர்த்தலை மேம்படுத்தல்
- சமூக பொருளாதார அபிவிருத்தித் தேவைப்பாடுகளை சமநிலைப்படுத்தி நிலைபேறான அபிவிருத்திக் கட்டமைப்புகளினுள் சுற்றாடல் முகாமைத்துவத்தை உறுதிசெய்தல்

**கோட்பாடுகள்;**

1. நாட்டினுள் காணப்படும் கனிய வளங்களின் வகை, தரம், பயன்பாடு மற்றும் பெறுமதி சேர்த்தலுக்காக உள்ள உள்ளார்ந்த ஆற்றல் ஆகியவற்றின்படி கனிய வளங்கள் வகைப்படுத்தப்படும்.

2. தேசிய பொருளாதாரத்தின் அபிலாஷைகள் மற்றும் நிலைபேறான வளப் பயன்பாட்டை இடருக்குள்ளாக்காது இலங்கைத் தரப்பினர்களுடன் கூட்டுத் தொழில்முயற்சிகளை ஆரம்பிக்கும் பொருட்டு வெளிநாட்டு முதலீட்டாளர்கள் மற்றும்/அல்லது தொழில்நுட்பத்தைக் கொண்ட ஆட்கள்/ நிறுவனங்களை கவர்வதற்குத் தேவையான சூழலை உருவாக்குதல்

3. கனிப்பொருட்களின் கண்டுபிடிப்பு மற்றும் இனங்காணப்பட்ட கனிய வளங்களின் அபிவிருத்தி ஆகிய துறைகளினுள் முதலீடு செய்வதற்கு அரச மற்றும் தனியார்துறையை ஊக்குவித்தல்

4. தொழில்நுட்ப உதவிக்கு உள்ள போதியளவான அணுகுதலின் ஊடாக கனியங்களை அடிப்படையாகக் கொண்ட புதிய கைத்தொழில்கள் மேம்படுத்தப்படும் என்பதோடு தற்போது காணப்படும் கைத்தொழில்கள் வலுப்படுத்தப்படும்.

5. கனிய வளங்களின் சந்தைப் பெறுமதியை மதிப்பீடு செய்தல் மற்றும் கனிய வளங்களின் ஏற்றுமதியின் மூலம் உண்மையான வருமானத்தைப் பெற்றுக்கொள்ளும் பொருட்டு சந்தை நுண்ணறிவு முறைமையொன்று தாபிக்கப்படும்.

6. முன்கூட்டி இணக்கப்பாட்டுக்கு வருகின்ற மற்றும் முன்கூட்டி அங்கீகரிக்கின்ற செயற்பாட்டின் அடிப்படையில் கைத்தொழிலுக்கான கனிய வளங்களை வினைத்திறன்மிக்கவாறு வழங்குவதற்கு அரசாங்கத்தினால் வசதி செய்து கொடுக்கப்படும்.

7. பெறுமதி சேர்க்கப்பட்ட உற்பத்திகளை மாத்திரம் ஏற்றுமதி செய்வதை உறுதிசெய்கின்ற முறைமையொன்று தாபிக்கப்படும். உள்நாட்டு நிலைமைகளின் கீழ் பெறுமதி சேர்ப்பதை மேற்கொள்ள முடியாதுள்ளபோது அல்லது பெறுமதி சேர்த்தல் காணப்படாதபோது மாத்திரம் மூலப்பொருட்களை ஏற்றுமதி செய்வதற்கு அனுமதி வழங்கப்படும்.

8. தகவல் மற்றும் ஆராய்ச்சி வர்த்தகமயப்படுத்தலுக்கு இலகுவாக அணுகக்கூடியதான வசதி வாய்ப்புகளுடன் கூடியதாக கனிப்பொருட்கள் மற்றும் கனியங்களை அடிப்படையாகக் கொண்ட உற்பத்திகள் தொடர்பில் ஆராய்ச்சிகள் மற்றும் அபிவிருத்திகளை மேற்கொள்வதற்கு அரசாங்கத்தினால் வசதி செய்து கொடுக்கப்படும்.

9. கொள்கையை நடைமுறைப்படுத்தும் பொருட்டு தற்போது காணப்படும் சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கான ஏற்புடைய திருத்தங்களை கொண்டுவந்து கனிய வளத்துறையின் ஒழுங்குமுறையாக்கல் முறையியல் பலப்படுத்தப்படும்.

10. நாட்டினுள் விளைவுத்தாக்கம்மிக்க மற்றும் வினைத்திறன்மிக்க கனிய வளத் துறையை உருவாக்கும் பொருட்டு இணைந்த மற்றும் பலம்பொருந்திய நிறுவனக் கட்டமைப்பொன்று தாபிக்கப்படும்.

11. சர்வதேசத்தினுள் போட்டியிடக்கூடியவாறு நாட்டின் கனிப்பொருள் சார்ந்த உற்பத்திகளை தரநியமப்படுத்தல் / சான்றுப்படுத்தல் ஊக்குவிக்கப்படும்.

12 சுற்றாடல் மற்றும் கனிப்பொருள் துறையின் தொழில்சார் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு பற்றிய ஒழுங்குவிதிகளை தயாரித்தலின் ஊடாக சுற்றாடல் மற்றும் மனித பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படும்.

**கொள்கைக் கூற்று;**

1வது கொள்கை - நாட்டினுள் காணப்படும் கனிய வளங்களின் வகை, தரம், பயன்பாடு மற்றும் பெறுமதி சேர்த்தலுக்காக உள்ள உள்ளார்ந்த ஆற்றல் ஆகியவற்றின்படி கனிய வளங்கள் வகைப்படுத்தப்படும்.

- படிப்படியான இற்றைப்படுத்தல்களை மேற்கொண்டு அடிப்படை புவிச் சரிதவியல் தரவுகள் உள்ளடங்கியதாக நாட்டினுள் காணப்படும் கனிய வளங்கள் பற்றிய தேசிய பொருட்பட்டியலொன்று தயாரிக்கப்படும்.
- முதலீடுகளை ஊக்குவிக்கும் பொருட்டு தகுந்த நிறுவனம்சார்ந்த மேற்பார்வைப் பொறிமுறையின் ஊடாக கனிய வளங்களின் தரத்தை இடையறாது மதிப்பீடு செய்து அறிக்கையிடப்படும்.
- கனிய வளங்களைப் பயன்படுத்தல் பற்றிய பொருளாதார மற்றும் சுற்றாடல் சார்ந்த சாத்தியத்தன்மையைக் கண்டறிதல் ஊக்குவிக்கப்படும்.
- கனிய வளக் கைத்தொழிலின் உள்ளார்ந்த ஆற்றலை விஸ்தரிக்கும் பொருட்டு கரை கடந்த சமுத்திரம்சார் கனிய வளங்களின் உள்ளார்ந்த ஆற்றலை மதிப்பீடு செய்தல் மற்றும் அவற்றைப் பயன்படுத்தல் மேம்படுத்தப்படும்.

2வது கொள்கை - தேசிய பொருளாதாரத்தின் அபிலாஷைகள் மற்றும் நிலைபேறான வளப் பயன்பாட்டை இடருக்குள்ளாக்காது இலங்கைத் தரப்பினர்களுடன் கூட்டுத் தொழில்முயற்சிகளை ஆரம்பிக்கும் பொருட்டு வெளிநாட்டு முதலீட்டாளர்கள் மற்றும்/ அல்லது தொழில்நுட்பத்தைக் கொண்ட ஆட்கள் / நிறுவனங்களை கவருவதற்குத் தேவையான சூழலை உருவாக்குதல்

- உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு முதலீட்டாளர்களுடன் மேற்கொள்கின்ற கூட்டுத் தொழில்முயற்சிகளை மேம்படுத்தி வலுப்படுத்தப்படும்.

- உயர் தொழில்நுட்பம் மற்றும் பெறுமதி சேர்க்கும் செயற்பாட்டுக்கு முன்னுரிமை அளித்து கைத்தொழில் முதலீடுகளுக்கு பொறுப்பு வகிக்க வேண்டிய அரச – தனியார் கூட்டுமுயற்சிகள் மற்றும் தொடர்புகள் மேம்படுத்தப்படும்.
- கனிய வளத்துறையினுள் நிலைபேறல்லாத தொழிற்பாடுகளைத் தடுக்கும் பொருட்டு மேற்கொள்ளக்கூடிய அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ளல்.

3வது கொள்கை - கனிப்பொருட்களின் கண்டுபிடிப்பு மற்றும் இனங்காணப்பட்ட கனிய வளங்களின் அபிவிருத்தி ஆகிய துறைகளினுள் முதலீடு செய்வதற்கு அரச மற்றும் தனியார்துறையை ஊக்குவித்தல்

- தனியார்துறையின் கண்டுபிடிப்புகள் மற்றும் மதிப்பாய்வுகளின் ஊடாக உருவாக்கப்பட்ட அடிப்படை புவிச் சரிதவியல் தரவுகளை பரிமாற்றிக்கொள்ளல் அரசாங்கத்தினால் உறுதிசெய்யப்படும்.

4வது கொள்கை - தொழில்நுட்ப உதவிக்கு உள்ள போதியளவான அணுகுதலின் ஊடாக கனியங்களை அடிப்படையாகக் கொண்ட புதிய கைத்தொழில்கள் மேம்படுத்தப்படும் என்பதோடு தற்போது காணப்படும் கைத்தொழில்கள் வலுப்படுத்தப்படும்.

- போட்டி ரீதியிலான அனுகூலம், ஏற்றுமதிக்கான உள்ளார்ந்த ஆற்றல் மற்றும் தொழில் உருவாக்க இயலளவு ஆகியவற்றை அதிகரிக்கச் செய்யும் நோக்கத்தை முன்னிலைப்படுத்தி தற்போது காணப்படும் கனிப்பொருள் சார்ந்த கைத்தொழில்களை வலுப்படுத்தி மற்றும் பல்வகைப்படுத்தி தொழில்நுட்ப, நிதியியல், முகாமைத்துவ மற்றும் சந்தை உதவிகளுக்கு போதியளவு அணுகுதலைப் பெற்றுக்கொடுத்து கனிய வளத் துறையினுள் ஈடுபட்டுள்ள புதிய சிறு அளவிலான தொழில்முயற்சியாளர்கள் மேம்படுத்தப்படும்.

5வது கொள்கை - கனிய வளங்களின் சந்தைப் பெறுமதியை மதிப்பீடு செய்தல் மற்றும் கனிய வளங்களின் ஏற்றுமதியின் மூலம் உண்மையான வருமானத்தைப் பெற்றுக்கொள்ளும் பொருட்டு சந்தை நுண்ணறிவு முறைமையொன்று தாபிக்கப்படும்.

- ஏற்றுமதிச் சந்தையினுள் உள்நாட்டுக் கனிப்பொருட்கள் வீழ்ச்சியடைவதைத் தவிர்க்கும் பொருட்டான முறையியல்கள் நடைமுறைப்படுத்தப்படும்.
- ஏற்றுமதிச் சந்தையினுள் உள்நாட்டுக் கனிப்பொருட்கள் வீழ்ச்சியடைதல் சம்பந்தமான தேவையான தகவல்களை முதலீட்டாளர்களிடமிருந்து பெற்றுக்கொள்வதற்கான முறையியல்கள் நடைமுறைப்படுத்தப்படும்.
- ஏற்றுமதி செய்யப்படுகின்ற கனிப்பொருட்களிலிருந்து பெற வேண்டியதான பண அனுப்பல்கள் உரியவாறு நாட்டுக்கு உட்பாய்ச்சப்படுதல் மற்றும் கனிய வளத் துறையிலிருந்து கிடைக்க வேண்டிய உச்சமட்ட பிரதிபலன்கள் பெற்றுக்கொள்ளப்படுவதை உறுதி செய்கின்ற முறையியல்கள் தயாரிக்கப்படும்.
- கனிப் பொருட்களை விற்பனை செய்வதன் மூலம் உச்சமட்ட பண அனுப்பல்களை கோருவதற்கு இயலுமானவாறு ஏற்றுமதி செய்யப்பட்ட கனிப் பொருட்கள் தகுந்த உயர் பயன்பாடுகளுக்காக பயன்படுத்தப்படுதல் தொடர்ச்சியாக மதிப்பிடப்படும். சட்ட விரோத பணப் பாய்ச்சல்களை தடுக்கும் பொருட்டு ஏற்றுமதி வருமானத்தை மேற்பார்வை செய்கின்ற பொறிமுறையொன்று தாபிக்கப்படும்.

6வது கொள்கை - முன்கூட்டி இணக்கப்பாட்டு வருகின்ற மற்றும் முன்கூட்டி அங்கீகரிக்கின்ற செயற்பாட்டின் அடிப்படையில் கைத்தொழிலுக்கான கனிய வளங்களை வினைத்திறன்மிக்கவாறு வழங்குவதற்கு அரசாங்கத்தினால் வசதி செய்து கொடுக்கப்படும்.

- முதலீட்டாளர்களுக்காக கனிப்பொருள் தரவுக் களஞ்சியங்கள் தயாரிக்கப்படும்.

- கருத்திட்ட அங்கீகாரத்திற்கான பூர்வாங்க தேவைப்பாடாக காணப்படுகின்ற பொருட்கள் பற்றிய சான்றிதழுடன் கூடியதாக கனிய வளத் துறையினுள் காணப்படுகின்ற கனிய வளங்கள் தொடர்பிலான முதலீட்டாளர்கள் மதிப்பீட்டுக்கு உள்ளாக்கப்படும்.

- பெறுமதி சேர்க்கின்ற விடயப் பரப்பு மற்றும் மட்டத்தின் அடிப்படையில் மிகச் சிறந்த நடைமுறைகள் கடைப்பிடிக்கப்படுவதை உறுதி செய்கின்ற கைத்தொழில்களுக்கு (கருத்திட்டங்கள்) முன்னுரிமை அளிக்கப்படும்.

- உள்நாட்டு ரீதியில் பெற்றுக்கொள்ள முடியுமான கனிப்பொருட்கள் உள்நாட்டு கைத்தொழிலாளர்களுக்கு பெற்றுக்கொடுக்கப்படுவதை இலகுபடுத்தும் பொறிமுறையொன்று அறிமுகப்படுத்தப்படும்.

7வது கொள்கை - பெறுமதி சேர்க்கப்பட்ட உற்பத்திகளை மாத்திரம் ஏற்றுமதி செய்வதை உறுதிசெய்கின்ற முறைமையொன்று தாபிக்கப்படும். உள்நாட்டு நிலைமைகளின் கீழ் பெறுமதி சேர்ப்பதை மேற்கொள்ள முடியாதுள்ளபோது அல்லது பெறுமதி சேர்த்தல் காணப்படாதபோது மாத்திரம் மூலப்பொருட்களை ஏற்றுமதி செய்வதற்கு அனுமதி வழங்கப்படும்.

- பொருளாதார பங்களிப்பு மற்றும் முதலீட்டின் அளவை அடிப்படையாகக் கொண்டு கனிப்பொருள் சார்ந்த உற்பத்திகளை அபிவிருத்தி செய்வதற்கு அவசியமான நிதியியல் கருவிகள் அறிமுகப்படுத்தப்படும்.

8வது கொள்கை - தகவல் மற்றும் ஆராய்ச்சி வர்த்தகமயப்படுத்தலுக்கு இலகுவாக அணுகக்கூடியதான வசதி வாய்ப்புகளுடன் கூடியதாக கனிப்பொருட்கள் மற்றும் கனியங்களை அடிப்படையாகக் கொண்ட உற்பத்திகள் தொடர்பில் ஆராய்ச்சிகள் மற்றும் அபிவிருத்திகளை மேற்கொள்வதற்கு அரசாங்கத்தினால் வசதி செய்து கொடுக்கப்படும்.

- ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தித் தகவல்களை பகிர்ந்தளிப்பதற்கு உகந்த பொறிமுறையொன்று தயாரிக்கப்படும்.

- பேடன்ற் உரிமத்தைப் பெற்றுக்கொடுக்கின்ற மற்றும் வர்த்தகமயப்படுத்துகின்ற துரித செயற்பாடுகள் அறிமுகப்படுத்தப்படும்.

- கனிய வளத் துறையின் மற்றும் கனிப் பொருள் சார்ந்த கைத்தொழில்களின் அபிவிருத்திக்காக உயர் தொழில்நுட்பம் மற்றும் அபிவிருத்திக்குத் தேவையான வசதிகள், நிறுவன உதவிக் கட்டமைப்பு மற்றும் போதியளவு தகைமைகளைப் பெற்ற மனித வளம் பெற்றுக்கொடுக்கப்படும்.

- ஒருங்கிணைந்த ஆராய்ச்சி முயற்சிகளை மேம்படுத்தும் பொருட்டு பல்வேறு மட்டங்களில் சார்புடைய நிறுவனங்களுக்கு (அரச மற்றும் தனியார்) மத்தியில் ஆராய்ச்சிச் செயற்பாடுகளில் ஒத்துழைப்பு, தகவல் மற்றும் வசதிகள் பகிர்ந்துகொள்ளப்படுதல் ஊக்குவிக்கப்படும்.

9வது கொள்கை - கொள்கையை நடைமுறைப்படுத்தும் பொருட்டு தற்போது காணப்படும் சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கான ஏற்புடைய திருத்தங்களை கொண்டுவந்து கனிய வளத்துறையின் ஒழுங்குமுறையாக்கல் முறையியல் பலப்படுத்தப்படும்.

- இத்துறையின் நிலைபேறான தன்மையை உறுதி செய்யும் பொருட்டு ஏற்புடைய எல்லாச் சந்தர்ப்பங்களிலும் சந்தை அடிப்படையிலான கருவிகள் அமுல்படுத்தப்படும்.

- நிலைபேறான கனிய வளக் கைத்தொழிலை தாபிக்கும் பொருட்டு தற்போது காணப்படுகின்ற வரி முறையியல்கள் பற்றிய விபரமானதொரு மதிப்பீட்டின் பின்னர் போதியளவிலான மற்றும் உகந்த வரி முறையொன்று அறிமுகப்படுத்தப்படும்.

- அதிக தொழில்முயற்சி வாய்ப்புகளை மேம்படுத்தி மற்றும் வரையறுக்கப்பட்ட கனிய வளங்களை நிலைபேறான விதத்தில் பயன்படுத்துவதை உறுதிசெய்து காணப்படுகின்ற சட்டங்கள் மற்றும் சார்புடைய ஒழுங்குவிதிகளை அதிக

கைத்தொழில் மற்றும் சுற்றாடல் நேயம்மிக்கதாக்கும் பொருட்டு அவை மீளாய்வு செய்யப்பட்டு திருத்தப்படும்.

10வது கொள்கை - நாட்டினுள் விளைவுத்தாக்கம்மிக்க மற்றும் வினைத்திறன்மிக்க கனிய வளத் துறையை உருவாக்கும் பொருட்டு இணைந்த மற்றும் பலம்பொருந்திய நிறுவனக் கட்டமைப்பொன்று தாபிக்கப்படும்.

- வினைத்திறனை அதிகரிக்கச் செய்தல் மற்றும் கனிய வள முகாமைத்துவத்துக்கு தேவையான நிறுவனக் கட்டமைப்பு பலப்படுத்தப்படும்.
- நாட்டினுள் போட்டி ரீதியிலான கனிப்பொருள் கைத்தொழிலை உருவாக்கும் பொருட்டு தற்போதுள்ள மற்றும் உயர் தொழில்நுட்பத்தை தழுவச் செய்வதற்குத் தேவையான மனித வள அபிவிருத்தியும் பயிற்சியும் மேம்படுத்தப்படும்.

11வது கொள்கை - சர்வதேசத்தினுள் போட்டியிடக்கூடியவாறு நாட்டின் கனிப்பொருள் சார்ந்த உற்பத்திகளை தரநியமப்படுத்தல் / சான்றுப்படுத்தல் ஊக்குவிக்கப்படும்.

- ஏற்றுமதி செய்யப்படுகின்ற கனிய மூலப்பொருட்கள் மற்றும் கனிப்பொருள் சார்ந்த உற்பத்திகளுக்கு புதிய தரநியமங்கள் மற்றும் சான்றுப்படுத்தல் முறையியல்கள் அறிமுகப்படுத்தப்படும்.
- இலங்கைக் கனிப்பொருட்களின் போலியற்ற தன்மையை சான்றுப்படுத்தல் மற்றும் மேம்படுத்தலை முன்னிட்டு கனிய வளங்களின் சட்ட ரீதியான பெறுமதியை இனங்கண்டு சான்றுப்படுத்தல் நடைபெறும்.

12வது கொள்கை - சுற்றாடல் மற்றும் கனிப்பொருள் துறையின் தொழில்சார் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு பற்றிய ஒழுங்குவிதிகளை தயாரித்தலின் ஊடாக சுற்றாடல் மற்றும் மனித பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படும்.

- நாட்டின் பொருளாதார அபிவிருத்தியை முன்னிட்டு கனிய வளங்களை நிலைபேறான விதத்தில் பயன்படுத்துவதற்கும் சுற்றாடல் பேணலுக்கும் இடையிலான சமநிலைப்படுத்தலானது செயற்பாடு பூராவும் மேம்படுத்தப்படும்.

- கனியம் மற்றும் கனிப்பொருள் சார்ந்த உற்பத்திகள் அல்லது அவற்றின் கழிவுப்பொருட்கள் அகழ்வின்போது, பதப்படுத்தலின்போது, பெறுமதி சேர்த்தலின்போது அல்லது ஏற்றிச் செல்லலின்போது உருவாகின்ற உபத்திரவமான நிலைமைகளை தவிர்க்கும் பொருட்டு உகந்த வழிகாட்டல் முறைமைகள் மற்றும் ஒழுங்குவிதிகளின் ஊடாக தொழில்சார் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு நிறுவனமயப்படுத்தப்படும்.

- அனைத்து நிலைமைகளின் பொருட்டும் போதியளவு மற்றும் தகுந்த நட்டஈட்டு முறை உறுதிப்படுத்தப்படும்.

- நாட்டிலுள்ள வரையறுக்கப்பட்ட கனிய வளங்களை நிலைபேறான விதத்தில் முகாமைத்துவம் செய்யும் பொருட்டு விழிப்புணர்வூட்டல் மூலோபாயங்கள் மேம்படுத்தப்படும்.

**அட்டவணை : பிரதானமான எண்ணக்கருக்கள் பற்றிய விளக்கம்**

கனிய வளங்கள் : வரைவிலக்கணத்தின்படி கனிய வளங்கள் எனப்படுவது இயற்கையாக உருவாகின்ற சேதனமல்லாத மற்றும் திட்டவட்டமான இரசாயன உள்ளடக்கத்தை கொண்ட படிக அமைப்பிலான ஒரு அல்லது பல படிமங்களாகும்.

பெறுமதி சேர்த்தல் : உயர் கைத்தொழில் பெறுமதி ஏற்படக்கூடியவாறு தொழில்நுட்பத்தை பயன்படுத்தி போட்டி ரீதியிலான மற்றும் விருத்தி செய்யப்பட்ட பண்புகள் மற்றும் பிரதிபலன்களை உருவாக்கல்

சந்தை அடிப்படையிலான கருவிகள் : செயற்பாடுகளுக்கான ஊக்குவிப்புகள்/ ஊக்குவிப்பற்றவைகளை பெற்றுக்கொடுக்கும் பொருட்டு விலைகள் அல்லது வேறு பொருளாதார மாறிகளைப் பயன்படுத்துகின்ற கொள்கைக் கருவிகள்

உச்சமட்ட உள்ளார்ந்த ஆற்றல்: உச்சப் பெறுமதியின் உயர் பெறுமானமாக ஆதல், சிலசந்தர்ப்பங்களில் சில பிரமாணங்கள் அல்லது வரையறைகள் மற்றும் அவற்றுக்கான வாய்ப்புகளின் கீழ்